உ

# சண்முகநாதன்.

[REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER.]

# SANMUKANATHAN.

| பத்திர விகிதம். | |
|---|---|
| உள்ளூருக்கு ௵ 1-க்கு ரூ. | 1-50 |
| வெளியூருக்கு ,, | ,, 2-00 |
| தொலைவாய்ப்பகுதிக்கு | ,, 2-50 |
| தனிப்பிரதி | சதம் 6 |

மாசமிருமுறை பிரகடனமாகும்.

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை போற்றி யொழுகப்படும்.

| விளம்பர விகிதம். | |
|---|---|
| முதன்முறைக்கு. | ரூ.—ச. |
| ஒரு கலத்துக்கு | 6-00 |
| அரைக்கலத்துக்கு | 3-00 |
| கால்கலத்துக்கு | 2-00 |
| வரி 1-க்கு | —8 |
| அடுத்த முறைக்கு டி அரைவாசி. | |

மலர் 5. யாழ்ப்பாணம், நள ௵ ஆடி ௴ 30 ௳ (14—8—1916) இதழ் 18.


உ

குகமயம்.

சங்கரன் றன்சேய்பிறைநஞ்சண்முகநாதன்பெய டிங்கிதமாம்பத்திரமுமென்னாளு—தங்குமுடன் உன்னரியனன்னிலைமையுற்றோங்கும்பல்லியிட மென்னவென்றுமோதுணையாம். [சோ



## சண்முகநாதன்.

யாழ்ப்பாணம்—நள ௵ ஆடி ௴ 30 ௳.

### ஆலயம்பலவிருந்தாம்பயனென்ன?

—(:0:)—

நிற்பினும் இருப்பினும் நடப்பினும் கிடப்பினும் மற்றெத்தொழிலைச் செய்யினும், எந்நேரமும் இடையறாது சிந்தித்து வந்திக்கவேண்டிய கடவுளை, பெண்பிள்ளைப்பண்டபதார்த்தங்களால் மயங்கிப் பலவிஷயங்களிலும் தம்புலனைச் செலவிட்டிருக்கும் மனிதர் தத்தம் வீடுகளிலிருந்து சிந்தித்து வந்தித்த லென்றால் அஃதொருகணமேனும் முடியாது. "நிலத்தியல்பா னீர்திரிந்தற்றாகுமாந்தர்க் கினத்தியல்பதாகுமறிவு" என்றபடி வீடுகளிலே அவர் கண்ணுக்குத் தோன்றுவனவும் காதிற்கேட்பனவும் பிறவும் அவர் மனத்தை வசித்துவிட அவ்வவற்றின் வசமாகவே அவர் ஒழுகுவதன்றிக் கடவுளை நினைத்தல் கூடாது. ஆலயத்திலோவென்னில் அவர் காண்பதெல்லாம் அடியார் திருக்கூட்டமும், விக்கிரக முதலாயினவுமாம். கேட்பன யாவும் சிவநாமங்களாம். செய்வன யாவும் சிவதொண்டுகளாம். நினைப்பன வெல்லாம் சிவ னியல்பாம். பேசுவன வெல்லாம் அவன் புகழாம். ஆதலால் அவர் மனமும் அவ்வவற்றிலீடுபட்டு எல்லாம் சிவமயமாய்த் தோற்றும். இதுபற்றியே "ஆலயந்தொழுவது சாலவுநன்று" என்றார் ஔவையாரும். எந்தவூரிலே கோயில் இல்லையோ அந்தவூரிலே கடவுளைவழிபடுவோருமில்லை. கடவுள் வழிபாடில்லையாகவே, அவர்களிடத்துச் செய்நன்றியறிதல் குருபத்தி இரக்கம் முதலாய தருமகுணங்களும் இல்லையாம். தருமகுணங்க ளில்லாதபோது அவரெல்லாம் பதிதரேயாவர். "கோயிலில்லாவூரிற் குடியிருக்கவேண்டாம்" என்றார்பெரியார். "திருக்கோ யிலில்லாத திருவி லூரும் திருவெண்ணீ றணியாத திருவி லூரும் பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும் பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும் விருப்போடு வெண்சங்க மூதா வூரும் விதானமும் வெண்கொடியு மில்லா வூரும் அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும் அவையெல்லா மூரல்ல அடவிகாடே" என்னுந் திருமறை யீண்டுச் சிந்திக்கற்பாலது.

கோயில் என்று அரசர் மாளிகை முதலியவற்றிற்கும் பெயராதலால் அவற்றைச் சாராது கடவுள் மெய்யடியார்பொருட்டுச் சாந்நித்தியமாகுமிடம் என்பார் திரு என்னும் அடைமொழியால் விசேடித்தார். அவ்வாறு திருக்கோயி லமைந்திருந்தும் அருச்சகர், தர்மகர்த்தர், ஸ்தானிகர், காரியஸ்தர், கணக்கப்பிள்ளை, காவற்காரர் முதலாயினோர் பிறமதஸ்தர்களாய் நாஸ்திகர்களாய் திருவெண்ணீற்றில் வெறுப்புடையராய், விருப்பிருந்துந் தரிக்கக்கூசுபவர்களாய், மறப்பவர்களாய், கடாய், விடாய், கல்வியில்லா மடராய், ஸ்நானாதி நித்தியகர்மானுட்டான மில்லாதாராய் இருப்பாராயின் ஆலய மிருந்தும் வியர்த்தமாய் முடியும். ஆதலால், ஆசாரசீலராய் நித்தியகர்மானுட்டானங்களை முடித்துத் திருவெண்ணீறணிந்த சைவர்களாயே யிருத்தல் வேண்டு மென்பார். "திருவெண்ணீறணியாத" என்றும், அவரெல்லாம் ஆலயத்தைத் தங்கள் சீவனார்த்தத்திற்குக் குறைவு வாராமற் சேமிக்கப்பட்ட திரவியசாலை யென்றும் வருடாவருடம் பணத்தொகையேறிவரும் குத்தகைப்பொருளென்றும், மாசச்சம்பளங் கூடிவரும் கச்சேரியென்றும்; வியாபாரச் சந்தையென்றும், சூதாடுகளரியென்றும், ஆறலைக்குமிடமென்றும், சோம்பர்துயிலிடமென்றும், வீம்பர்புகழிடமென்றும், யுத்தகளம் என்றும், கொலைக்களமென்றும், நாடகசாலையென்றும் எண்ணி, அவ்வெண்ணப்படியே யொழுகி நிரயப்படுகுழியில் விழுந்துழலாது, அன்பே வடிவாய், காண்பனவெல்லாஞ் சிவமாய், கேட்பனவெல்லாஞ் சிவமந்திரமாய், சொல்வனவெல்லாஞ் சிவநாமமாய், நினைப்பனவெல்லாஞ் சிவனியல்பாய், செய்வனவெல்லாஞ் சிவபணியாய் நின்று தேவார திருவாசகாதி அருட்பாக்களையோதலே தகுதியென்பார். "பத்திமையாற்பாடாவூரும்" என்றும், கடவுளிலக்கணங்களையும், அவரை எய்துநெறியையும் அடைந்தோர் பெறும் பயனையும், பிறவற்றையும் அறிதல் ஆலய வழிபாடு செய்யுஞ் சைவர்களுக் கின்றியமையாதன வாதலால், அவற்றையெல்லாந் திருக்கூட்டத்தார் இருந்து சம்பாஷித்து அறியவேண்டிய இடங்கள் மடாலயம் முதலாயின வாதலால் அவை இன்றியமையாதன வென்பார். "பலதளிகள் இல்லாவூரும்" என்றும், மடாலயங்களை யமைத்தும், துன்மார்க்கவிஷயங்களுக் குறைவிடமாக்காது; அம் மடாலயமுதலியவற்றிலே வருஞ் சிவனடியார் திருக்கூட்டத்தார் கூடிச் சிவசாத்திரவிசாரணை முதலாயின செய்யுமிடத்து அவர்கள் பசிபிணியால் வருந்தாது மகேசுரபூசை செய்து "உண்டிநா லுவிதத்தி லறுசுவைத்திறத்தினில்" அமுது செய்வித்தலும் வேண்டுமென்பார். "வெண்சங்கமூதாவூரும்" என்றும், வழிச்செல்வோர் வெயிலில் நடந்த விளைப்பாறும் பொருட்டுத் தண்ணீர்ப்பந்தல் அறச்சாலைகள் இருத்தல் அவசியமென்பார். "விதானமும் வெண்கொடியு மில்லாவூரும்" என்றும், யாவருஞ் சிவபூசாதுரந்தரரா யிருத்தல் அவசியமென்பார். "மலர்பறித்திட் டுண்ணாவூரும்" என்றும், காரணகாரியத் தொடர்போடு விளங்கும் இப்பாசுரத்தின் உட்கிடைகளை யாவர்தா மறிவார்? சொற்பல பெருகப் பற்பல பேசியென்? அன்பர்களே! நமது, யாழ்ப்பாணத்திலே ஊர், குறிச்சி, கிராமம், குளம், கிணறு, முச்சந்தி, நாற்சந்தி, ஆல், அரசு, வேம்பு, மருது, புளி வேறும்உள்ளன ஆகிய [illegible] எல்லாம் எத்தனை எத்தனையோ அத்தனை அத்தனையிடத்துஞ் சிறியவும் பெரியவுமான கோயில்களைக் காண்கின்றோமல்லவா? (ஆலயங்களின் நிலைமையைப் பற்றிப் பிறிதோரிடத்து விரிப்போமாதலால் அப்பாற் செல்வாம்.)

ஒரு கோயிலிருந்தால் அதனை நடாத்துதற்கு அதிபதியும் அருச்சிக்க அருச்சகரும் வழிபடச் சனங்களும் அவசியம் வேண்டுமன்றோ? இவரெல்லாஞ் சைவசாத்திரவுணர்ச்சியும் ஈசுரபத்தியும் நல்லொழுக்கமு முடையரா யிருத்தலும் அவசியமன்றோ? இவற்றிற்கு மாறாகக் கோயில் எசமானர்களிற் பலர் தலையுடைத்துப் பார்த்தாலும் அங்கேயோ ரெழுத்தேனும் காணப்பெறாத முழுமக்களாயிருக்கின்றார்கள். சிலர் கிறிஸ்தவர்கள், சிலர் கிறிஸ்தவக்கலப்புள்ளவர்கள், சிலர் கிறிஸ்தவகூட்டப்பயிற்சியும் சைவக்கூட்டத் தளர்ச்சியும் பெரிதுடையவர்கள். சிலர் நாஸ்திகர். சிலர் நைவேத்தியப் பாட்டு வாசிக்கவேணும் பொருள்சொல்லவேணும் ஈசானதிக்கிலே தேவாரபுராணங்கள்சொல்லவேணும் மிகக் கஷ்டப்பட்டுப் பயின்றிருக்கின்றார்கள். சிலர் இங்கிலிசுத் தலையும் பிரான்சுத் தாடியுமாக கஞ்சாவுண்டைவிழுங்கிச் சரீரமுழுதும் விபூதியப்பிக்கொண்டு அருச்சகர்மனையிலேயே அருந்தல் பொருந்தல்கள்செய்து அவர்கொடுக்கும் அருச்சனைத் தக்கிணைப் பணத்தைக் கொண்டு வாகனமமைத்துத் திரிகின்றார்கள். சிலர் விபூதியைக் குழைத்துப் பூசிக்கொண்டு திருவிழாக்காலங்களிலே கரிப்பொட்டு வைக்கவும் தேங்காயுடைக்கவும் வாகனக்கொம்பைத் தொட்டுக்கொண்டு நிற்கவும், அருச்சகரை வாயில்வந்தபடி தூஷிக்கவும், பிரசாதம் பங்கிடவும் முன்வருவார்கள். சிலர் தமக்கு விருப்பமான குருக்கள் வந்து கொடியேற்றாமையால், ஏற்றின கொடியை இறக்குவித்து மகிழ்வார்கள். சிலர் தமக்கு விருப்பமான மேளம் வாராமையாலே திருவிழா நடைபெறாது தடுப்பர். ஆனால், மிகக் கிரமமாக விதிவழாது நடாத்தும் புண்ணியவான்களும் மிகச் சிலர் இருக்கின்றார்கள். அவர்களை நாமிங்கே கூறவேண்டியதில்லை. மேலே சொல்லப்பட்ட எசமானர்களெல்லாம் மேற்கூறிப்போந்த செயல்களே கோயில் எஜமானர்களுக் கின்றியமையா விலக்கணங்களென்று நம்பியிருக்கிறார்கள். இவர்களிப்படியாக இவர்களுக்குப் பிற்காலத்திலே மணியங்களாக வர விருக்குஞ் சின்ன எஜமான்களாகிய இவர்கள் மக்கள் பாடோ சொல்லவேண்டியதில்லை. கிறிஸ்த பாடசாலைகளிற் சேர்ந்து கிறிஸ்தாசாரந் தழுவி இங்கிலிசு உச்சப்படியில்நிற்பதாய் விட்டது. தமிழ் என்றால் நொன்சென்ஸ் என்கிறார்கள். சைவம் என்றால் சருவம் என்கிறார்கள். விபூதியை அவர்களறியார்கள். சைவவித்தியாசாலை என்றெண்ணப்படும் வித்தியாசாலையிற் சேர்ந்து தமிழைப் படிப்பினும் இங்கிலிசுபடிப்பினும் சைவசமயபோதமணமும் வீசப்பெறாமையினாலே கிறிஸ்தபாடசாலையிற் படிக்கும் சைவப்பிள்ளைகள் [illegible] இருக்கிறார்கள். நிற்க,

அருச்சகர்கள்பாட்டைப் பார்ப்போம். ஆசாரம் என்றால் அநாசாரம். தேசாசாரங்களோடு கூடிய விபசாரம் என்பனவே. கல்வி, தமிழிலே புராணங்கள் இரண்டு மூன்றின் காப்புச் செய்யுட்களைச் சுரோத்திர ஞானத்தால் ஒருவாறு கெட்டுருப்பண்ணிக்கொண்டு சமஸ்கிருதத்திலே, ஒரு மூர்த்திக்குரிய சோடசநாமத்திலே துவாதசநாமமும் பிழைபடக்கேள்வியிற் பாடமாக்கியும் ஊர்ப்புரோகிதத்தின் பொருட்டு ஆசௌச நிவிர்த்திக்குரிய புண்ணியயாகங்களும், சங்கற்பமந்திரங்களும் மணிப்பிரவாளநடையில் பிழைகலந்து பாடமாக்கியும், இருந்தாலும் வன்னுன்கொடுத்த கஞ்சிப் பசையறக் கொடுக்கும் பிடிநாலுங் குறையாது விளங்குவார். இவர்கள் ஆலயத்துள்ளே போகச் சுவாமி வெளியேபோய்விடுவார். இவ்வருச்சகர்களது புத்திரர்களோ வெகுவிநோதம். தலைமயிர் கத்தரித்தல், தாடி வளர்த்தல், மீசை வளர்த்தல், தாடியும் மீசையும் வளர்த்தல், துவிசக்காரருடாய் வீதியிற் பவனிவருதல், ஆலயத்துள்ளுஞ் சட்டை தரித்தல், பூணூலைப் பிறரறியாவகை மறைத்துக்கொள்ளுதல், இங்கிலிசேபேச விரும்புதல் முதலிய திருத்தங்களிலே முற்பட்டுவருகின்றனர். ஆனால் கல்வி கேள்வி ஒழுக்கம் முதலியவற்றிலே மிகச் சிறந்த பிராமணோத்தமருஞ் சிலர் உளர். "நல்லா ரொருவருளரே லவர்பொருட் டெல்லார்க்கும் பெய்யுமழை" என்றவாறே யாகப் புண்ணிய புருஷோத்தமர்களாகிய பிராமணர் சிலர் இருந்து சிவார்ச்சனை முதலாயின விதியுற நடாத்தி வருதலினாலேதான் ஆண்டுமாரியேனும் பெய்கின்றது.

இனி, ஆலயவழிபாடுசெய்யும் ஊர்ச்சனங்களைக் கவனிப்போம். மெய்யன்போடு ஆலயத்துக்குப்போய் உண்மைவழிபாடு செய்வோர் மிகச் சிலரே. மற்றையோரெல்லாம் ஒதுங்கேட்கவேணும் காவிகட்டவேணும் வேறு யாதாயினும் இம்மை

...க மனுபவிக்கவேணுமேயென்ணி ஆலய வழிபாடு என்று பெயரளவில் வைத்துக் கொண்டு செல்கின்றனர். எப்படியிருந்தாலும் இவர்கள் ஆலயத்திற்போனவுடனே கையெடுத்து வணங்குகிறார்கள். இவர்களெல்லாம் ஆலயவழிபாட்டு கிரமமறியாதவர்களே யாயினும், வாயார வாழ்த்த இரண்டு தோத்திரப்பா வறியாதவர்களே யாயினும், தங்கள் பழங்கோபந் தீர்க்கும் யுத்தகள மென்றோ அன்றி வேறு யாதானுமொன்றாகவோ அவ்வாலயத்தை நினைத்து அக்கருமமுடிக்கு நோக்கமாகவேனும் அங்கேவந்துகூடி ஆலயத்தைச் சனப்பழக்கமுள்ளவோரிடமாக்கி விடுகின்றார்கள். இவர்கள் பெற்ற பிள்ளைகளோ தமிழ்க்கல்வியும் சைவசமயபோதமுமின்றி யிருக்கின்றனர் பலர். தமிழ்ப்படிப்பினும் கிறிஸ்தவ பாடசாலைகளிற் படித்து "மரித்தாரே கிறிஸ்து" என்றற் றொடக்கத்த பாட்டுக்கள் படித்தும், "மந்திரமாவது நீறு" என்றற் றொடக்கத்த பாட்டுக்கள் படிக்கவுந் தெரியாதவர்களா யிருக்கின்றனர். இந்தச் சிறுவர்களன்றோ எதிர்காலத்திலே ஆலயகர்த்தர்களாகவும், பஞ்சகர்த்தாக்களைச் சேர்ந்தவர்களாகவும், திருவிழாக்காரராகவும், காவடியெடுப்பவர்களாகவும், அங்கப்பிரதக்கணஞ் செய்பவர்களாகவும், சந்நிதானங்களிலே நின்று பெலமாய்ச் சத்தமிட்டுப் பாடுகிறவர்களாகவும், திருவிழாக்காலங்களிலே சனம் விலக்குபவர்களாகவும் வருபவர்கள். இவர்கள் சைவசமய வணக்க மில்லாத சமயக் குருடர்களாய்ப் பதிதர்களா யிருந்தால் ஆலயவழிபாடுசெய்பவர் யாவர்? ஆலயத் தெசமான்பிள்ளைகள்சமயக்குருடர். அருச்சகர்பிள்ளைகள் மூடர் சண்டாளர். ஊரவர்பிள்ளைகளும் முழுமக்கள் பதிதரென்றிருந்தால் குப்பை குப்பையாகக் கோயில்களை வைத்திருப்பதிற் பயனென்ன? ஆலயங்களின் எஜமானர்கள் தகுதியற்றோரெனக்கண்டால் மேற்பார்வையைத் தரைத்தனத்தாரிடமேனும் ஒப்பிக்கலாம். அருச்சகர் விஷயத்திலே யாது செய்யலாம்?

முற்காலத்திலே எத்தனையோ பல்லாயிரஞ் சனங்கள்செய்த அநேக வேலைகளை இக்காலத்திலே ஒவ்வொரு யந்திரஞ்செய்துமுடித்தல் காண்கின்றோமே. அஃதேபோல அருச்சகர் விஷயத்திலே யந்திரங்களை யமைத்தாலும் வழிபடுவோர் விஷயத்தில் யாது செய்யலாம்? கும்பிடுவோரில்லாவிடத்துக் கோயில் பல விருந்தாம் பயனென்ன? யாழ்ப்பாணத்திலுள்ள சைவர்களே! பத்திரிகையை நிரப்பும் பொருட்டாக இவ்விஷயத்தை யெழுதினேமல்லேம். உங்கள் தவறுகளை உங்களுக்கு வெளிப்படக்காட்டி யிடித்துரைக்கும்படியாகவே யெழுதினேம்.

இந்த யாழ்ப்பாணச் சீதாரியிலேயுள்ள கிறிஸ்தவர்களுக்குரிய பெரிய இங்கிலிசுவித்தியாசாலை நான்குளவே! ஒவ்வொன்றிலும் ஆயிரக்கணக்காகவும் ஐஞ்ஞூற்றுக்கணக்காகவும் பிள்ளைகள் படிக்கிறார்களே! இப்பிள்ளைகளெல்லாங் கிறிஸ்த பிள்ளைகளா? 100-கு 90-விதம் சைவப் பிள்ளைக ளல்லவா? இவர்களெல்லாம் ஆகாயத்தால் வந்தவர்களா? உங்கள் அருந்தவப் பிள்ளைக ளல்லவா? நீங்கள் இறந்தால் உங்கள் அபரக்கிருத்தியஞ் செய்பவர் யாவர்? பிதிர் கருமஞ் செய்யப் படிப்பித்தீர்களா? "மைந்தரைப் பெறுகின்றதும் மாசிலாப்—புந்தியன்பொடு போற்றிவளர்ப்பதும்—தந்தைமாண்டுழித் தம்முறைக்கேற்றிட—வந்தமில்கடனாற்றுதற் கேயன்றோ" என்று ஓரசுரன் கூறியதையாயினுஞ் சிந்தித்தீர்களா? மறுபிறப் பில்லையென்று போதித்து வாதிக்கும் மஞ்ஞானிகளா நமது சைவப்பிள்ளைகளுக்குப் பிதிர்கருமம் போதிப்பவர்கள்? இவ்வித்தியாசாலைகளுள் ஒன்றிலே, "சைவப் பிள்ளைகளும் மாணுக்கராய் வந்து சேர்ந்தால் ஏற்றுக்கொள்ளப்படும். ஆனால், அவர்கள் விபூதிதரித்தல் கூடாது" என்பதோர் பிரமாண மிருப்பதறிந்தும், சண்டாளத்தன்மையாய் விபூதி தரியாதிருக்க உடன்பட்டு எத்தனையோ பேர் உங்கள் பிள்ளைகளை அங்கே விடுதியிலிருந்து கெடும்படி யனுப்பியிருக்கிறீர்களே! அப்பிரமாணத்துக்குமாறாக விபூதிதரித்த இரண்டொரு பிள்ளைகள் விலக்கப்பட்டது மறிவீரே! உங்களுக்கேனிந்த மதியீனம்?!

இனி, யாழ்ப்பாணச் சீதாரியினுள்ளே சைவர்களுக் கென்றிருக்கும் ஆங்கில பாடசாலை மிகப்பிரசித்திபெற்ற "இந்துக் கல்லூரி" ஒன்று. சைவத்தை நிறுத்தப் பெருமுயற்சிசெய்யும் எங்கள் யாழ்ப்பாணத்து மிகப்பெரிய உன்னதபதவியிலிருக்குஞ் சைவப்பிரபுசிரோன்மணிகள் பலர் "தன்மூக்குப்போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழை வரவேணும்" என்றபடி அடிக்கடி இடையறாது செய்துவரும் பெருவஞ்சனை யெல்லாவற்றையும் மாதுலன் கஞ்சனசெய்த பாதகங்களையெல்லாம் சாதுரியமாய் வென்ற யாதவன் கண்ணன்போலவென்று ஸ்ரீ வண்ணை வைத்தீஸ்வரனுடைய பூரணகிருபாகடாக்ஷம்பெற்று நாளொருவண்ணம் பொழுதொருமேனியாக வளரும் குழந்தையாகிய வைத்தீஸ்வர வித்தியாலயம் மற்றொன்று. மேற்கூறிய நான்கு கிறிஸ்த வித்தியாசாலைகளிலும் படிக்கும் சைவப்பிள்ளைகள் "இந்துக்கலூரி" "வைத்தீஸ்வர வித்தியாலயம்" என்னும் இரண்டு சைவவித்தியாசாலைகளிலும் வந்து படிக்கற் பாலமா? இவர்கள் யாவரும் ஒருங்கேவந்துபடிக்க, வித்தியாசாலை இடம்பெறாதுபோனால், ஸ்ரீ வைத்தீஸ்வரப் பிரானார் இன்னும் எத்தனை வித்தியாசாலைக் கொணாறும் இடந்தாராரா? வண்ணைவாசிகள் தாபரிக்கமாட்டார்களா? கொக்குவில் உரும்பராய் என்னுமிடங்களிற் போல நல்லூர் சேணியதெரு முதலிய இடங்களிலுள்ள சைவர்கள் தம்பிள்ளைகளுக் கெனத் தத்தமூர்களிலே சைவ வித்தியாசாலை தாபிக்க முன்வாரரா? யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் பல நகரங்களிலும் தீவாந்தரங்களிலும் உத்தியோகத்தி லிருக்கும் யாழ்ப்பாணச் சைவர்கள் முனசெய்ததேபோலப் பின்னும் பலவகை யுதவிசெய்து இந்துகல்லூரிக் கட்டடத்தைப் பின்னு மகற்றமாட்டார்களா? ஐயையோ! நாடகமாத்திரையில் நடிக்கின்றீர்களே! சைவவித்தியாசாலைகளை நடாத்தி ஆளுகின்றவர்களும், அவற்றைக்கூடியவர்களுமாகிய எத்தனை சைவப்பிரபுக்கள் இந்துக்கல்லூரியில் உயர்தரக்கல்வி கற்பிக்கப்படுங்காலத்தும், தங்கள் பிள்ளைகளைக்கிறிஸ்தவர்களுடைய விடுதிப்பாடசாலைகளுக்கனுப்பினார்கள்; அனுப்புகிறார்கள். "பேச்சுப் பல்லக்குத் தம்பி கால்நடை" என்றதுபோ விருக்கிறதே! நாடகத்தாலும் சைவம் வளர்க்கலாமா? கிறிஸ்தவர்களது விடுதிப் பாடசாலையிற் படிக்கும் உங்கள் சைவப்பிள்ளைகள் கோயிற் பழக்கம் பழகுவதெனுல் யாது செய்வர்? கிறிஸ்த ஆலயங்களிலேதான் பழகுவார்களா?

இனிச் சைவத்தமிழ் வித்தியாசாலைகளைப் பார்க்குமிடத்து, தமிழ் அக்ஷராப்பியாசம் பாலபாடம் நிகண்டு இலக்கண முதல்புராணம் இதிகாசம் நீதிநூல் சமயநூல் முதலியவற்றிலும் சமஸ்கிருதத்திலும் பண்டிதன் பாவலன் பாரதி நாவலன் முதலாயபட்டம் பெறத்தக்க உயர்தரக் கல்வியை இலவசமாயும் உண்டிஉறையுள் கொடுத்தும், கரும்புதின்னக் கூலிபோலச் சிறிது பணமுதவியும், தக்க புலவர் பண்டிதர்களை ஆசிரியராய் நியோகித்துக் கல்வியிற்றுவித்தும், சைவாசாரஞ் சிறிதுங் குறையாது தக்க எசமானராலே நடத்தப்படுவதாகிய ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்களது சைவப்பிரகாசவித்தியாசாலை ஒன்றே இவ்விலங்கை முழுதுக்கும் பொதுவாகி உயர்தரத் தமிழ்ச்சைவவித்தியாசாலையா யிருப்பவும், இவற்றைப் பொருட்படுத்தாது மிகச் சமீபத்திலே கோட்டடியிலேயுள்ள கிறிஸ்தவர்களது தமிழ்ப்போதனவித்தியாசாலையிலே விபூதியை யழித்தெட்டுப்போய்ச் சேர்ந்து வருடக்கணக்காகப் படித்து உபாத்தியாயர்களுக்குரிய மூன்றும்வகுப்புத் தராதலப்பத்திரம் பெற்றுக்கொண்டு அதன்பின் விபூதி தரித்தும் தரியாமலும் சைவப் பள்ளிக்கூடங்களில்படிப்பிக்கும் ஆசிரியர்களாக எத்தனை சைவப்பிள்ளைகள் இருக்கிறார்கள். இவ்வகைத் தராதலப் பத்திரத்திற்காக விபூதியையழித்து நெறிகடந்து பிறமதப்படுகுழியில் விழுவோருள்ளே பெரும்பாலார் காரைதீவார், கரைவெட்டியார், கொடிகாமத்தார் முதலிய கிராமத்தாரும் தீவாருமே. இவர்களெல்லாம் ஒவ்வொரு சைவாலய எசமானர்கள், திருவிழாக்காரர் முதலியோர் தம் புத்திரர்கள் சைவப்பிரகாசவித்தியாசாலைக்கும் கோட்டடிப்போதனவித்தியாசாலைக்கும் உள்ள தூரம் கால்மைலேயாம். கிறிஸ்தவர்களது போதனவித்தியாசாலையின் மூன்றும்வகுப்புத் தராதலப்பத்திரம் பெற்ற ஒருவனுக்குச் சம்பளம் கிராமங்களில் ஏழுரூபாவாயினும், எட்டுரூபாவாயினும் உண்டு. பட்டினம் என்றால் பத்தேனும், பன்னிரண்டேனும் உண்டு. பிறவூர் சென்றால் பதினைந்தும் இருபதுமுண்டு.

சைவப்பிரகாச வித்தியாசாலையிலே கற்றால், இலக்கணம், சமயநூல், நீதிநூல்கள் முதலியவற்றிலே பண்டிதனுமாகலாம், சைவசிகாமணியுமா யிருக்கலாம். எவ்விடத்தும் எப்பொழுதும் வேண்டிய பொருள் நனகு கடைக்கும். இவற்றை யுணராது மௌட்டிகத் தன்மையாய்ப் புறமதாசாரமனுட்டித்த சைவப்போலிகளும் புறமதஸ்தர்களுமாகிய உபாத்தியாயர்களாமா எங்கள் பிள்ளைகளுக்குச் சைவம்போதிப்பவர்கள். இந்த ஆசிரியர்களும் இவர்களிடம் சமயபோதம்பெற்றவர்களுந்தாமா ஆலயங்களை சிறப்புற நடாத்த வல்லுநர்? இவர்கள் கற்ற கல்வி கிறிஸ்தவர்செய்யுங் குருக்கவாதத்தைக் கண்டித்துச் சுயமதத்தாபனஞ் செய்து எழுதப்போதுமா? கிரமமாகச் சமயநூல் கற்றிருந்தால், ஊமைகள்போல் உழறுவோமா? எழுதத் தெரியாமல் ஒன்றிருக்க வேறொன்றையெழுதி யாப்பிழுத்ததுபோல அவலப்படுவமா?

ஆதலினாலே, சைவநண்பர்களே, எங்கள் பிள்ளைகளுக்குச் சைவசமயக் கல்வி கற்பிக்கவேண்டும். சைவசமய நூலுணர்வுமிக்க ஆசிரியர்களிடம் அவர்கள் பயிலவும் வேண்டும். அவ்வாசிரியர்கள் சைவ வித்தியாசாலைகளிலே படிப்பிக்கவும் வேண்டும். வித்தியாசாலை சைவசமய நூலுணர்வின்மிக்க சைவப்பாதுகாப்பாளரின்மேற்பார்வையி லிருத்தலும் வேண்டும். இப்படிக் கிரமத்தேறுஞ் சைவப்பிள்ளைகள் கற்றுவருவார்களே யாமாயின் ஆலயவழிபாடு செய்யச் சனங்களு முண்டு என்னலாம். இன்னும் குரோதம் வீம்பு முதலிய காரணமாகப் புதிது புதிதாகத் தோற்றிச் சிலகாலம் சிவபூசைநடந்து பின்பு சிலகாலஞ் சிவபூசையின்றிக் குறைந்து இறுதியில் ஒருபூசையுமில்லாமல் வெளவான்மண்டபங்களாய்க் கிடக்கின்றனவும், உள்ளனவெல்லாம் கறையான் வேய்தல் பெற்று ஆகாயவெளி யடைபடாது சந்திர சூரிய வாயு வருணதரிசனஞ்செய்து பூசையின்றிக் கிடந்து விட்டு வசந்தகாலமான வுடனே, கண்ணுச்சுவாமி, பொன்னுச்சுவாமி, வீரசுவாமி, அண்ணுச்சுவாமி, ஐயாச்சுவாமி, குருசுவாமி, முத்துச்சுவாமி, ரெத்தினசுவாமி, கந்தசுவாமி, குப்புச்சுவாமி, தங்கச்சுவாமி, றங்கசுவாமி, இராமசுவாமி, நாராயணசுவாமி, கோவிந்தசுவாமி, கிஷ்ணசுவாமி, பக்கிரிச்சுவாமி, சின்னச்சுவாமி முதலிய இந்தியாவினின்று வந்த உயர்ந்த விலைமேளக்காரரைப் பெருந்தொகைப் பொருள்கொடுத்து அழைத்து அவர்களைக் கிரமமின்றி யாவரும் ஒருங்கே கோஷிக்க வசியும், பருத்தித்துறைப் பவளக்கற்சப்பிரம், தொல்புரத்துக் கண்ணாடிச்சப்பிரம், கோண்டாவில் வண்ணான் சப்பிரம் என்னுமிவற்றைக் கொண்டுவந்து விடியவிடியக் காவிக்கொண்டு திரிந்து கையிற் பணமெல்லாம் வீணுகச் செலவானபின் முன்போலப் பூசையின்றிக் கிடப்பனவும், கரிப்பெட்டு, சங்கற்பம், தேங்காயுடைத்தல், ஆசீர்வாதத்திற் பேர் சொல்லுதல் முதலிய எசமான் வேலைகளிற் பிணக்குற்று 1000-ம், 10000-மென்று கோட்டுக்கிறைத்துப் பூசையின்றிப் பூட்டப்பட்டுக் கிடப்பனவாகிய ஆலயங்களையெல்லாம் சைவவித்தியாசாலைகளும் சிவபுராணபடனமண்டபங்களும் ஆக்குங்கள். கோயில் எஜமானர்களே!

உங்கள் ஆலயங்களிலே சைவவித்தியாசாலைகளைத் தாபித்துப் பிள்ளைகளுக்குச் சைவசமயசாத்திரங்களைப் போதியுங்கள். சைவவித்தியாசாலை தாபிப்பவர்களுக்கு உங்களாலியன்ற உதவிசெய்து, அவர்களை ஊக்கப்படுத்துங்கள். வண்ணை வைத்தீஸ்வராலய தர்மகர்த்தாவர்கள் வித்தியாசாலை விஷயமாகச் செய்யும் உதவியையும் கீரிமலைச் சிவன்கோயிலாதீனகர்த்தாவர்கள்செய்யும் அருஞ்செயலையும் பின்பற்றுங்கள். சமயவுணர்ச்சி வளருமாயினன்றோ ஆலயவழிபாடுஞ் சிறப்புற நடைபெறும்!.

---


வந்துவிட்டது!

வந்துவிட்டது!!

## சைவபோதம் முதற்புத்தகம்

வெளிவந்துவிட்டது.

இளைஞர் முதியர் ஆகிய எப்பாலாரும் சர்க்கரை, கற்கண்டு, தேன்பாகு முதலிய தித்திப்பு வகைகள் எக்குணந் தரினும் அவற்றை மிக்க விருப்போடு பக்குவமா யுண்பர். பெருநோயைத்தீர்க்கும் அருமருந்தே யாயினும் சுவை வேறுபாடு நோக்கி யஃது அருந்தக் கூசுவர். அம்மருந்தை மேற்கூறிய தித்திப்புவகையோடு சேர்த்து வைத்தால் அத் தித்திப்பின் றுணைபெற்று மருந்தினையுட்கொண்டு நோய் நீக்கம்பெறுவர். அஃதேபோலக், கதைகளறிவதில் யாவர்க்கும் விருப்பமுண்டு. பதி பசு பாசம் சாதனம் ஞானம் முத்தி என்றற் றொடக்கத்த சமய விஷயங்கள் அறிவதில் அத்துணை விருப்பமிராது. ஆதலால் கதைகள் மூலமாகச் சமய விஷயங்களை சொன்னால் எவரும் விரும்பி அறிந்து பயன் பெறுவர்.

இக்காலத்திலே அரசபாஷையையே யாவரும் விரும்பிக் கற்றலாலும், சுதேசபாஷையைத் தக்கவாறு கல்லாமையாலும் சுதேசபாஷையிலுள்ளனவாகிய சமயவிஷயங்கள் நம்மவரிற் பெரும்பாலார்க்குத் தெரியா. தெரியாமைக்குக் காரணம் அவற்றைப் பாடசாலைகளிலே விரும்பிக் கற்றுக்கொள்ளாமையே. விருப்பம் வராமைக்குக் காரணம் அவ்விஷயங்கள் கேட்க இனிமையாகிய கதையோடு சேர்ந்து வராமையும், பொருள்விளக்கமில்லாமலே நெட்டுருப்பண்ணுதலால் வருங்கஷ்டமுமேயாம்.

கஷ்டமொன்றுமில்லாமல் மிக எளிதிலே யாவரும் சமய விஷயத்தைவிரும்பிக் கற்றுக்கொள்ள வசதியுடையதாக யாழ்ப்பாணத்து விக்ரோறியாகலாசாலை ஆசிரியர் ஸ்ரீ. சு. சிவபாதசுந்தரம் பி. ஏ. அவர்கள் சிவபுராணங்களிலும் பிற நூல்களிலும் உள்ள சரித்திரங்களைத் தெரிந்தெடுத்துச் சிறுவரும் எளிதிலுணரக்கூடிய தமிழ்வசன நடையிலே "சைவபோதம்" என்னும் நூலை இயற்றி வெளிப்படுத்தி யிருக்கின்றார்கள். இப்பொழுது வெளிவந்திருப்பது முதற்புத்தகமே இந்நூலிலே 32-சிறந்தகதைகளிருக்கின்றன. இதற்குக் கௌரவ ஸ்ரீ. பொ இராமநாததுரை கே. ஸி. ஸி. எம் ஜி. 29-விளக்கங்காட்டிச் சிறந்தபாயிரம் கூறியிருக்கின்றார்கள். இந்நூல் சைவத்தமிழ் ஆங்கிலிசு வித்தியாசாலைகள் எவ்விடங்களிலும் படிக்கும் மாணக்கர்களுக்குச் சமயபோதஞ் செய்யச் சிறந்தகருவியாகும். இதன் விலை சதம்-30. வேண்டுவோர் இந்

நூலாசிரியோ விடத்திலும், சண்முகநாதன் புத்தகசாலையிலும், வைத்தியேஸ்வர வித்தியாலயத்திலும், நல்லூர்க் கந்தசுவாமிகோவில் மேலவீதியில் புத்தகக்கடை வைத்திருக்கும் வ. நாகமுத்து அவர்களிடத்திலும், நம தாபிசிலும் பெற்றுக்கொள்ளலாம். நமக்குத் தந்த பிரதியை உவந்தேற்றும்.

கையொப்பமானிகள் கவனிக்கவேண்டிய

## முக்கிய விஷயம்.

பத்திரிகாபிமானிகளே!

நமது "சண்முகநாத" பத்திரிகையின், அபிவிர்த்தியின் பொருட்டு; வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், பச்சிலைப்பள்ளி ஆதிய இடங்கட்கு, ம-ா-ா-ஸ்ரீ. கா. சி. கந்தையபிள்ளை அவர்கள் வந்திருப்பதால், அவ்வவ்வூர்ப், பத்திரிகாபிமானிகள் தங்கள் தங்களால் வரவேண்டிய பழைய பத்திரிகைப் பணத்தோடு, இவ் வருடப் பணத்தையும் கொடுத்துப், புதியபத்திரிகாபிமானிகளையும் சேர்த்துக் கொடுத்து உதவி புரியுமாறு வேண்டுகின்றோம்.

மானேசர்.

## வர்த்தமானங்கள்.

கொப்பரு:—இது இப்பொழுது கண்டியொன்று 65-ரூபாவாக விற்கப்படுகின்றது.

நல்லூர்க் கந்தசுவாமிகோவில்:—இவ்வாலயத்தில் இந்தமீ 20உ வெள்ளிக்கிழமை அ சாரோகணமாகி மகோற்சவம் வெகு சிறப்புடன் நடைபெறுகின்றது. ஆவணிமீ 12உ ஞாயிற்றுக்கிழமை ரதோற்சவமும், 13உ திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். விவரங்களை கண்டு தெரிவிப்பார்களாக.

"ஞானவிர்த்திச் சங்கம்"—இச் சங்கத்தால், ஆடிமீ 7உ (22—7—16) சனிக்கிழமை சாயங்காலம் ஆனைக்கோட்டையில் சிவபாததெரு ஸ்ரீபார்வதி வித்தியாலயத்தில் ஷெ சங்க இரண்டாம்வருட முதல் மாதாந்தப் பிரசாரணம் நல்லூர் உபயவேதாகமபண்டிதரும், வைதிகசைவ உபந்நியாசகரும், சிவபுராணப்பிரசாரகரும், சைவாலயங்களை பிரசங்கிப்புமான பிரம்மஸ்ரீ. வே. கனகசபாபதிஐயரவர்கள் "பக்தி" என்னும் அரிய விஷயத்தைப் பீடிகையாக்கொண்டு, வெகுசாதுரியமாகப் பிரசங்கஞ்செய்தனர்.

கோத்தாரிசுமாருக் கோர் புதிய சட்டம்:—கோத்தாரிசுமார் எழுதும் உறுதிகளுக்கு 48-மணித்தியாலங்களுக்குள் சத்தியவாசக மெழுதவேண்டுமென்று, ஈசாட்டியார் சட்டநிரூபணசபையில் ஓர் சட்டங்கொண்டுவரத் திருக்கின்றனர். அதற்கு, கௌரவ ஸ்ரீமாக். பொ. இராமநாதனவர்கள் 48-மணித்தியாலங்களுள் எழுதிக் கொள்ளுதல் கஷ்டமென்றும், ஒவ்வொரு காணியும் எட்டுமணித்தியாலங்கொண்ட நாளாகக் கவனித்து ஆறு நாட்களுள் சத்தியவாசகம் எழுதப்படவேண்டுமென்று மாற்றுதல் நல்லதென்று சொல்லினர். அதற்கு கௌரவ கோலைனன் சிற்றம்பலர் அவர்கள் மறுமொழியாக கொழும்புள்ள சிலகோத்தாரிசுமாரைத்தான் விளுசிய போது 48-மணித்தியாலங்களுள் எழுதலாமென்று சொல்லினரென்றும், உடனே சத்தியவாசக மெழுதாது, பின் ரேவைதால் சில வேலைகளில் சில காரியங்களை புதிதாக நுழைத்துவிடுகிறார்கள். ஆனபடியாற்றான் 48-மணித்தியாலங்களுள் எழுதவேண்டுமென்று இச்சட்டம் கொண்டுவரப்பட்டதென்றும் இன்னும் நிஷ்டிஸ்ரூர் ஜெனறல் அவர்களுடன் ஆலோசித்து இதைப்பற்றித்தீர்மானஞ் செய்யப்படுமென்று சொல்லினர்.

இராமநாத வித்தியாலயம்—இவ்வித்தியாலயத்திலே இந்தமீ 19உ சனிக்கிழமை பிற்பகல் 4½மணியளவிலே வித்தியாகர்த்தர் ஸ்ரீ. ஈ. பி. (E. B.) டென்ஹம் அவர்கள் அக்கிராசனம்வகித்துப் பிள்ளைகளுக்குப் பரிசுகொடுப்பார்கள்.

தமிழ்ப் பிரதிநிதித் தேரிவைப் பற்றிய கூட்டங்கள்:—இலங்கைச் சட்டநிரூபணசபைத் தமிழ்மெம்பராக வர விரும்பி இருப்போர்க்காகக் கூட்டங்கள் நடக்கின்றன. இந்தமாதம் 4-ந் தேதி ஸ்ரீ. எச். ஏ. பி. சந்திரசேகர அவர்களுக்காக ஒருகூட்டமும், 7-தேதி ஸ்ரீ. ஜே. எச். வலவரியசிங்கம் அவர்களுக்காக ஓர் கூட்டமும், 8-ந்தேதி ஸ்ரீ. டபிள்யூ. துரைச்சாமி அவர்களுக்காக ஓர் கூட்டமும் நிற்சவேமண்டபத்தில் நடத்தப்பட்டது. இன்றையதினம் ஸ்ரீ. அ. சபாபதி அவர்களுக்காகக் கூட்ட மொன்று நடை பெறுமாம்.

முதலை:—வங்காளப் பகுதியில் ஒரு ஆற்றிலேகிடந்த முதலையொன்றை யொரு பொலிஸ் வீரன் சுட்டுக் கொன்று ஒரு தோணியி லேற்றி ஆறு கூலியாட்களைக் கொண்டு மிகுந்த சங்கடப்பட்டு, அதைக் கரைக்கு இழுப்பித்தானும். அதன் நீளம் 18-அடி, சுற்றளவு 10½-அடியாம். வெகு சனங்கள் வேடிக்கை பார்த்தார்களாம். அதன் வயிற்றைக் கிழிப்பார்த்தபொழுது மூன்று மனுடத்தலையோடும் 12-வளையல்களும் பெண்களணியும் வேறுசில நகைகளும் கிடந்தனவாம்.

## யுத்தம்.

14000-ம் பேர்வரையிற்கொண்ட ஓர் துருக்கியசேனை ரூமானிக் கணித்தாக இங்கிலீசரின் அரண்களைத் தாக்கிற்று. செட் என்னுந் துறைக்குக் கிழக்கேயுள்ள ரூமானியின் முன்னணி ஏழெட்டுமைல் தூரமிருக்கும். மூன்று பிரித்தானிய போர்க்கப்பல்கள் இந்த யுத்தத்தில் துணைசெய்தது. துருக்கர் 500-பேர்வரையில் இங்கிலீசுகாறரிடம் கைதிகளாகினார்கள். இதில் காயப்பட்டோர் 250-பேர்.

ஜெனறல் சேர் டி. சேயிக் பின்வருமாறு விளம்பரப்படுத்துகிறார்:—சில்லறை யுத்தங்களில், நாங்கள் சொற்ப இடங்களை பிடித்துக்கொண்டோம். சிலரைக் கைதிகளாக்கினோம்.

பசான்ரின் என்னுமிடத்திற் கொஞ்ச இடம் பிடிபட்டிருக்கிறது. டில்வில் வூட்டை எதிரிகளின் நான்கு பெலமான சேனைகள் எங்களைத் தாக்கின. அவர்களை எங்களுக்குக் கிட்ட வரவிட்டு, எதிர்த்து யுத்தம்புரிந்து துரத்திப்போட்டோம். எதிரிகளி லநேகர் மாண்டுபோனார்கள். சத்துராதிகளின் இரண்டு ஆகாயக்கப்பல்கள் சுட்டுவிழுத்தப்பட்டன.

பிராஞ்சிய நிப்போட்டு:—தியோமொன்ற் பௌறி ஓரத்தில், எதிரிகள் அதிக சேதத்துடன் துரத்தப்பட்டார்கள். சேர்மனியர் நாங்கள் பிடித்த இடங்களைக் கைப்பற்ற மீட்டும் மீட்டும் தெண்டித்தும் பலிக்கவில்லை.

## விளம்பரம்.


### திருவாதவூரடிகள் புராணம்.

—(:0:)—

ஆசிரியர் ஸ்ரீமத். ம. க. வேற்பிள்ளை அவர்கள் செய்த விருத்தியுரையுடன் விலை ரூபா-1. 75. இது சைவசமயிகள் ஒவ்வொருவரிடத்திலும் ஆவசியகம் இருக்கவேண்டிய நூலாகையால், "சண்முகநாதன்" பத்திரிகைச் சந்தாதாரர்களுக்கு மாத்திரம் விலை ரூபா-1-25 ஆக கொடுபடும். வேண்டுவோர் அடியிற் காணும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:—

சி. சி. சண்முகம்பிள்ளை,
சண்முகநாதன் புத்தகசாலை,
வண்ணார்பண்ணை;
யாழ்ப்பாணம்.



14—8—1916

### அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் எட்டாமிலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் வண்மேற்கு ரூம. வீ. அகி. முத்துவயிருப்பிள்ளையிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போ தவணைதப்பி ஷெ சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்

| நம் | ஹு | மீ | உ | ரூபா | ஊர் | பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 831 | 1914 | மாசி | 17 | 600 | சோனகதெரு ம. மீராசாய்புமுகைபதீன்தம்பி | பொன் சரிகசோடி 1. கப்புத்தாலி 1. அகல்மாலை 1. அஞ்சுபட்டு மணிக்கோர்வை 1. சவடி 1. |
| 834 | ஷெ | ஷெ | 18 | 160 | சோனகதெரு பிள்ளைமுத்து சாகுல்கமீது | பொன்கிள்ளட்டியல் 1 தாலிப்பின்கோர்க்கி1. பின்கோக்கி 2 சவடி 1. |
| 844 | ஷெ | ஷெ | 21 | 80 | கந்தர்மடம் சங்கரி பொன்னம்பலம். [புதல்காதர் | பொன்கொலுசுக்காப்பு சோடி 1 |
| 976 | ஷெ | ஆனி | 10 | 45 | சோனகதெரு செ. அசனுமரைக்காயர் சுலுத்தான | பொன் அலுக்கெத்து 15 காதப்பூ 1 ஒருபட்டுமணிக்கோர்வை 1 பொன்துண்டு 1. |
| 42 | ஷெ கார்த்திகை | | 16 | 15 | வண்கிழக்கு பென்னு சின்னத்துரை | தங்கமோதிரம் 1. |
| 59 | ஷெ | ஷெ | 24 | 35 | கொக்குவில்கிழக்கு அம்பலவாணர் இராமநாதர் | பொன் கிள்ளட்டியல் 1 |
| 189 | 1915 | பங்குனி | 20 | 40 | செட்டித்தெரு சுப்பையாசெட்டிகதிரவேலுசெட்டி | வெள்ளிப்பாதசரம்சோடி 1 கல்லாசளி சோடி 1 |
| 225 | ஷெ | சித்திரை | 12 | 40 | கொக்குவில்கிழக்கு க. சப்ர அப்பாபிள்ளை | பொன்காதுமணி சோடி 1 |
| 238 | ஷெ | ஷெ | 19 | 25 | சோனகதெரு சேகுமெய்தீ மீர மெய்தீன் | பொன்மூனுநால் கிச்சுமணி 1 |
| 307 | ஷெ | வைகாசி | 12 | 40 | சரவணை நாகநாதர் நாகலிங்கம் | பொன்காதுமணி சோடி 1. |
| 417 | ஷெ | ஆனி | 11 | 70 | பறங்கித்தெரு கண தி பிள்ளை கந்தையா | பொன் பட்டணக்காப்பு சோடி 1 |
| 439 | ஷெ | ஷெ | 19 | 45 | வண்கிழக்கு சின்னத்தம்பி கந்தையா | பொன்கம்பிப்பூரானட்டியல் 1 |
| 531 | ஷெ | ஆடி | 18 | 110 | வண்கிழக்கு வேலாயுதர் தம்பியப்பா | பொன் தொங்கல்சரடு 1 சிறுபட்டணக்காப்பு சோடி 1 கல்காதோலை சோடி 1 [திரம்1 |
| 563 | ஷெ | ஷெ | 25 | 55 | நீராவிபடி ஆறுமுகம் கந்தையா | பொன் நவல்மாலைச்சங்கிலி 1 முரிந்தகல் மோதிரம் |
| 565 | ஷெ | ஷெ | 26 | 75 | சங்கவேலி சின்னத்தம்பி பொன்னையா | பொன்பட்டணக்காப்பு சோடி 1 |
| 591 | ஷெ | ஆவணி | 3 | 25 | வண்கிழக்கு அருணசலம் சபாபதி | வெள்ளிப்பாதசரம் சோடி 1 |

விற்பனவு—1916 ஹு ஆகஸ்டுமீ 24ம் 25ந்திகதிகளுக்குச் சரியாய் நிகழும் நள ஹு ஆவணிமீ 9ந்உ வியாழக்கிழமையும் 10ந்உ வெள்ளிக்கிழமையும்பகல் பத்துமணியளவில் ஷெ கடைத்திண்ணையிலிருந்து எடுபட்டநகைகிங்கலாகப் பிரசித்தவலைத்திலை நடத்தப்படும்.

சி ஐயம்பிள்ளைஉடையார் வெநதீவ்மேவ்தர்


## கடிதங்கள்

### ஆசௌசவினு?

—:0:—

ஆசிரியருக்கு.

உடன் பிறந்த தமையனின் புத்திரனின் மரணத்தைக்குறித்த ஆசௌசம் சிறியபிதாவுக்கு முப்பது தினங்களுக்குமுன் ஆசௌசம் நீங்குமா. அப்படி நீங்குவதற்கு ஆசௌசவிதிகூறும் நூல்களில் பிரமாண முண்டோ வென்பதை இப்பத்திரிகைவாயிலாக வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரிகோணமலை.
31—7—1916.

இங்ஙனம்:
கோணேசர்.

### சைவப் பிரசங்கம்.

—(:0:)—

நிகழும் நள ஹு ஆனிமீ 26உ (9—7—16) ஆதிவாரத்தனறு பிற்பகல் ஆறுமணி தொடக்கம் ஒன்பதுமணி வரைக்குஞ் சங்கானை மேற்குச் சைவப்பிரகாச வித்தியாசாலையில், ஷெ வித்தியாசாலைச் சொந்தக்காரரும், மானேஜரும் ஆரியதிராவிட வித்பனருமாகிய பிரம்மஸ்ரீமத். அ. அருணாசலசாஸ்திரிகள் அவர்கள் அக்கிராசனாதிபத்தியத்தின்கீட் சைவப்பிரசங்கஞ் செய்யப்பட்டது. ஷெ சாஸ்திரிகளவர்கள் புத்திரன் பிரம்மஸ்ரீ. அ. பஞ்சாநதக்குருக்கள் அவர்கள் பக்கவாத்திய சகிதமாய்த் தேவாரபாராயணஞ்செய்யப் பிரசங்கமாரம்பமாயிது. ஸ்ரீ. மாணிக்கத்தியாகராஜா அவர்களால், மாமதுரை முக்குணாசத திருவிளையாடல்" என்னு மதியற்புத யதிமதுரமாகிய திருச்சரித்திரம் மிருதங்க பக்கவாத்திய சகிதமாய்ச் சபையோர்க்குக் கர்ணாமிர்தமாக வெகு சிறப்பாகப் பிரசங்கிக்கப்பட்டது. ஈற்றில் லக்கிராசனரவர்களரிய குறிப்புரைகளுடனுந் தேவாரபாராயணத்துடனும் பிரசங்கஞ் சமாப்தியாயிற்று. அத் தருணஞ் சைவாபிமானிகளனேகர் நாற்றிசைக்கினுமிருந்து வந்து குழுமிச் சிரவணானந்த முற்றுத் தத்த மில்லம்புக்கினர். இவ்வண்ணமே சைவப்பிரசங்கஞ் செவ்வனேநடைபெறவும், வித்தியாசாலை சிறந்து நன்னிலைக்குவரவும் திருபாமூர்த்தியாகிய விநாயகப்பெருமான் றண்ணளி புரிவாராக. சுபமஸ்து.

சங்கானைமேற்கு,
16—7—16.

இங்ஙனம்:
தெ. சோமசுந்தரம்பிள்ளை
"ஸ்ரீதெக்ஷிணாமூர்த்திவில்லா"

### யாழ்ப்பாணப்பெரியசிதம்பரம்

அன்பர்களே, தில்லையின்கணுள்ள சிதம்பரமே அதி விசிட்டமுடைய தென்று பெரும்பொருள்கொடுத்துக் கடல மலைகடந்து யாறுபல தாண்டிப் பேறுபலவேண்டித் தவம்பலகிடந்து தினம்பலகடந்த இதுகாறுஞ் செய்த பிரயாணம் இனி வேண்டியதில்லை. ஏனெனில் நமது யாழ்ப்பாணத்திலும் ஒருசிதம்பரமுண்டு. அது தில்லைச் சிதம்பரத்திலுமுயர்ந்தது. எங்ஙனமெனில், தில்லைச் சிதம்பரத்திலே நடமாடுஞ் சபாபதி கனகசபைக் கண்ணது. இங்கு மவ்வறே. அங்கே மன்றுள்வெளியுண்டு இங்கே முற்றவெளியுண்டு. அங்கே வைத்தீஸ்வரன்கோயில் சீகாளி சமீபமாயுண்டு இங்கே அவை மிகச் சமீபத்திலுண்டு. அங்கே ஞானப்பிரகாசமுண்டு இங்கும் அஃதுண்டு. அங்கே சனகன் ஞானப்பிரகாச தடத்துண் மூழ்கிச் சூழவிருக்கும் மடத்திற் றங்குவாரகள், இங்கே ஞானப்பிரகாச விஷயார்த்தகாரசதுண் மூழ்கி நீனிமட்டத்திற் றங்குவர்கள். அங்கே மன்றுடி ஒருவரே, இங்கு மன்றுடி பலர். அங்கே நடராசர் ஒருவர், இங்கே நடராச பலர். அங்குளார் அம்பலவாணர், இங்குமுளர் அம்பலவாணர். அங்கே நடராசர்க்கும் கூழாத்தினராகிய தில்லைவா ழந்தணர்களுக்கும் முத்திரையுண்டு, இங்கேயும் நடராசர் குழாத்தினர்க்கு முழக்குசசடையு முற்சிகையு முண்டு. அங்கே தில்லைக்காளி பென்னும் பெண்ணின் கூத்த வட்டமுண்டு. இங்கேயும் ஒருபெண்வடக்கு அரங்கநாயகமாய் ஆடலுண்டு. அந்த மன்றுடிக்குச் சதுர்ப்புயமுண்டு, இந்த மன்றுடிகளுக்கு மன்றுடும் வேளைகளிற் சதுர்ப்புய முண்டு. அங்கே திருவந்தன்படுக்கையுண்டு இங்கு மஃதுண்டு. அந்த மன்றுடிக்குக் கையிலே மருப்புச்சட்டி யுண்டு, இந்த மன்றுடிகளுக்குக் கையிலும் மடியிலும் நெருப்புப் பெட்டியுண்டு. அந்நடராசருக்குச் சிரிப்புவாய் நெருப்புண்டு. இந்நடராசருக்குச் சுருட்டுவாய் நெருப்புண்டு. அங்கும் மைக்களம், இங்கும் மைக்களம். அங்கே சம்பந்தர்பாடலுண்டு, இங்கு மஃதுண்டு. அங்கே யாணடு திருமுறை யோட்டத்தேறுந்தலுண்டு, இங்கே நாளுந் திருமுறை மோட்டாரூர்தலுண்டு. அங்கே சாரூப முண்டென்று சொல்வார்கள், இங்கே அநேகர் நடமாடுஞ் சாரூபம் பெற்றிடக் கண்டோம். அங்கே யிரண்டறக்கலந்ததாகிய சாயுச்சியம் உண்டாம். இங்கு மஃதுண்டாம். அங்கே பஞ்சாக்ஷரப்படியுண்டு, இங்கும் (பணவரும்) படியுண்டு. அங்கே பஞ்சகிருத்தியமுண்டு. இங்கே பஞ்சமா—கிருத்தியமுண்டு. அங்கே அதிரகசியம் வெறும்பாழ், இங்கே அதிரகசியம் சதத்குனியம்.

வேறக்குறைவைத் தில்லைச்சிதம்பரத்தின் மேற்பட்டு கிற்றலால் இந்த நடனதரிசனம் புரிந்துகொண்டு இவ்விடத்தை மேற்படுத்துவதே புத்தி.

இங்ஙனம்:
பழைய மன்றுடி.

## கெடுவான் கேடுசூழ்வான்
### ஓர் விநோத சரித்திரம்.

ஒரு மந்த மதியுள்ள அரசனிடத்தில் ஒரு சித்திரவேலைக்காரனும், ஒரு தச்சனும் இருந்தார்கள். அவர்களிருவரும் அதி நுட்பமான வேலைகளில் வல்லுனர்களாதலினால், ஒருவரோ டொருவர் விரோதிகளா யிருந்தார்கள். அவர்களுள் ஓவிய வேலைகாரன் தனது பகைவனாகிய தபதியை அந்தச் சமஸ்தானத்திலிருந்தும் அகற்றிவிடவேண்டுமென்று சமயம்பார்த்திருந்தான். இங்ஙனமிருக்கையில், ஒருநாள் சித்திரவேலைக்காரன் அரசன் சமுகஞ்சென்று பிரபுவே! தங்கள் அன்புள்ள தந்தையாராகிய பெரிய ராசாவானவர் தாமிருக்குந் தெய்வலோகத்திற்கு அடியேனை வரும்படி கட்டளையிட்டார். அவருடைய கட்டளைப்படியே நான் தெய்வலோகஞ்சென்று அவரைத் தரிசித்தேன். அத் தெய்வலோகத்திலே அவரனுபவிக்கும் இன்ப சுகங்களை என்னால் எடுத்துரைக்கமுடியாது. நான் அவரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு திரும்பி வருகையில், அவர் தங்களிடங் கொடுக்கும்படி இந்தக் கடிதத்தைக் கொடுத்தார், என்று வெகு விநயத்துடன் அக்கடிதத்தை நீட்டினான்.

அக்கடிதம்வருமாறு:—

எனது அன்புள்ள புத்திரனுக்குச் சகல நன்மைகளும் உண்டாகுக. நான் சுவர்க்கத்தில் பலவிதமான இன்பங்களையும் அனுபவித்து வருகிறேன். இப்போது இவ் விடத்திலே ஒருகோயில் கட்ட உத்தேசித்திருக்கிறேன். ஆகையால், இக்கடிதங்கண்டவுடன் உன்னுடைய சமஸ்தானத்துத் தச்சனை விரைவாக அனுப்பிவை. உன்னுடைய க்ஷேமத்தைக் குறித்து இங்கே பல கைங்கரியங்கள் செய்து வருகிறேன், அநேக ஆசீர்வாதம்.

இங்ஙனம்:
உன் அன்புள்ள பிதா.

அரசன் அக்கடிதத்தைப் படித்துப்பார்த்துப் பொய்யென்று உணராமல், தனது விவேக சூனியத்தால், தகப்பனிடமிருந்து வந்ததாக மதித்து வெகுவாய் ஆனந்தித்து அப்பொழுதே தச்சனை அழைத்துவரும்படி கட்டளையிட்டான், தச்சன் சமஸ்தானத்துக்கு வந்ததும், அரசன் அவனைப் பார்த்து நமது தகப்பனார் தேவலோகத்திலிருப்பது உமக்குத் தெரியு மல்லவா. அவர் இப்போது அங்கே ஒருபுதிய கோயில் கட்டப் பிரயத்தனஞ் செய்திருக்கின்றாராம். அதற்கு நீர் அங்கே அவசியம் போகவேண்டும். இதோ அவரிடமிருந்து நமக்குவந்த திருமுகம் என்று சொல்லிச் சித்திரவேலைக்காரன் கொடுத்த கடிதத்தைக் காட்டினான். தச்சனுங் கடிதத்தை நன்றாகப் படித்துப்பார்த்து இது அசாத்தியமான காரியம். இதுவரையில் நமது அரசனுக்கு மூளை யுண்டென்று இருந்தோம். இன்றுதான் இவனுடைய மௌடிகத்தன்மை வெளிப்பட்டது. இவ்வளவும் நமது சென்மசத்துருவாகிய சித்திரவேலைக்காரனுடைய சதியாயிருத்தல்வேண்டும். ஆயினும் எல்லாம்வல்ல செகதீசன் நமக்கு நல்ல யுத்திகளைக் கற்பித்து, இந்த ஆபத்தில் நின்றும் விடுவிப்பார். என்று தன்மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, அரசனைப்பார்த்து பிரபு! ஒரு விண்ணப்பம். மகாராசாவின் ஆஞ்ஞையை நிறைவேற்ற அடியேன் சிறிதும் பின்வாங்குபவனல்ல. தெய்வலோகம் போவதற்கு மாத்திரம் வழியைக் காட்டிக்கொடுத்தால், மற்றைக் காரியங்களைத் திருப்திகரமாய்ச் செய்துமுடித்துவிடுகிறேன் என்றான். அதைச் செவியுற்ற அரசன் இன்னதுசெய்வதென்று தெரியாமல், சித்திர வேலைக்காரனை அழைத்துச் சுவர்க்கலோகத்திற்கு வழிகாட்டும்படி ஆக்ஞாபித்தான். அவனும் மகாராசாவே. தங்கள் பிதாவாகிய பெரியராசாவானவர் தச்சனை அவனுடைய ஆயுதங்களுடன் ஓரிடத்தில் உட்கார வைத்து, அவனைச் சுற்றிலுங் காய்ந்தகட்டைகளை அடுக்கி அவைகளின்மேல் குடக்கணக்காய் நெய்யை ஊற்றி மேளவாத்திய முழக்கத்துடன் அக்கட்டைகளுக்கு தீயை யேற்றினால், அப்போதுண்டாகும் வெளிச்சத்தில் தெய்வலோகந் தோற்றப்பட மரக்கட்டைகளில்நின்று எழும்பும் புகையென்கின்ற புரவியின்மேல் தச்சன் ஏறிக்கொண்டு தமது மாளிகைக்கு நேரே வந்துவிடுவானென்று சொன்னார். இதை நான் கேட்டபடியே தங்கள் சந்நிதியிற் கூறினேன் என்றான். பின்பு தச்சன் தைரியத்தை விடாமல் மகாராசாவே! ஒரு விண்ணப்பம். எனக்குச் சிறிது சாவகாசங் கொடுத்தல்வேண்டும். எனக்கு அவசியமான சொந்த அலுவல்கள் சில இருக்கின்றன. அவற்றை நிறைவேற்றமாத்திரம் அனுமதிகொடுக்கவேண்டும். அவைகள் முடிவுபெற ஒருவாரஞ்செல்லும். வாரமுடிவில் தெய்வலோகம்போகச் சித்தமாய் வருகிறேன் என்றான். அரசனும் இசைந்து அனுமதி கொடுத்துவிடத் தச்சன் தன் வீடுசென்று தன் இல்லாளிடம் அரண்மனையில் நடந்த சம்பவங்களை ஆதியோடந்தமாகக் கூறி வியாகுலமடைந்தான். அதனைச் செவியுற்ற தச்சன் மனையாள், தனது நாயகனுக்கு வேண்டிய ஆறுதலான வார்த்தைகளைச்சொல்லி, நீர் ஒன்றுக்குங் கலங்காதீர். காலகாலனாகிய எம்பெருமானுடைய கிருபை பூரணமாயிருக்கும்வரையில், எங்கள் விரோதியினுடைய கோள்ச்சொல்லானது ஒன்றுஞ்செய்யமாட்டாது. ‘முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்’ என்ற ஔவைப்பிராட்டியார் திருவாக்கின்படி இது அவனுக்கே நீங்காய் முடியும். நீர் இந்த ஆபத்தில் நின்றுந் தப்பும்நிமித்தம் ஒருவரு மறியாமல் எங்கள் வீட்டிலிருந்து உம்மை அக்கினிப்பிரவேசஞ்செய்ய நியமித்திருக்கும் இடம்வரைக்கும் ஓர் சுரங்கம்வெட்டி, நீர் உட்கார்ந்திருக்கவேண்டிய இடத்தின் கீழ் ஒரு சதுரக்கல்லைவைத்து அது மற்றவர்களுக்குத் தெரியாமல் மண்ணால் மூடிவையும் என்று சமயோசிதமாகக் கூறினாள். தச்சனும் தன் மனைவியின்வாக்கைக் குரு உபதேசமாகக் கைக்கொண்டு வேண்டியபொருளை விரயஞ்செய்து ஒருவருக்குந் தெரியாமல் அப்படியே நிறைவேற்றிவைத்தான். அரசனும் ஏழாம்நாள் தச்சனைத் தெய்வலோகத்திற்கு அனுப்புவதற்காகத் தன்நகரத்தார் ஒவ்வொருவருக்கும் ஒருகட்டுவிறகும், ஒருபடி நெய்யுங்கொண்டுவந்து கொடுக்கவேண்டுமென்று பறையறைவித்தான். குறித்த தினத்தில் விறகும் நெய்யும் தவறாமல்வந்துசேர்ந்தன. பின்பு அரசன் தச்சனை அவனுடைய ஆயுதங்களுடன் முன் நிச்சயிக்கப்பட்டிருந்த இடத்திலே இருக்கும்படி செய்து, அவனைச்சுற்றி விறகு கட்டைகளை அடுக்கி அவைகளின்மேல் நெய்யை ஊற்றி நெருப்பிடுவித்தான். சமஸ்தான சங்கீத வித்துவான்களிற் சிலர் மிருதங்கம் அடித்தனர். சிலர் யாழ்மீட்டினர். சிலர் கொம்புவாத்தியங்களை ஊதினர். சிலர் இனிய குரலோடு கீதம்பாடினர். புகையுஞ் சுவாலையும் விசும்பு எங்கணும் பரந்து நெருங்கின. தச்சனும் இதுதான் சமயமென்று மெதுவாய்க் கல்லை அகற்றித் தன்னுடைய ஆயுதங்களுடன் சுரங்கத்தின் வழியாக வீடுபோய்ச் சேர்ந்தான். புகையுஞ் சுவாலையும் சடசட என்னும் ஒலியோடு ஆகாயமளாவி வீசுகையில், சித்திரவேலைகாரன் அவைகளைச் சுட்டிக்காட்டி அதோ பாருங்கள் தச்சன் தேவலோகஞ்செல்லுகின்றதை யென்று கூவினான். அங்கு கூடிநின்றோரெல்லோரும், தச்சன் தேவலோகம் போய்ச்சேர்ந்தானென்று சொல்லிக்கொண்டு தத்தம் இருப்பிடங்களுக் கேகினர். இச் சம்பவம் நடந்து ஒருமாதம்வரையில், தச்சன் தன் வீட்டில் நின்றும் வெளிப்படாமல் தன் தேகம் வெளுக்குமாறு பசுப்பாலில் ஸ்நானஞ்செய்துவந்தான். ஒருமாதம் முடிந்தவுடன் உயர்ந்த ஆடையாபரணங்களை அணிந்துகொண்டு தெய்வலோகத்திலிருந்து பெரியராசா தனமகனுக்கு எழுதியதாக ஒரு கடிதத்தையும் எழுதுவித்துக்கொண்டு அரசனிடஞ் சென்றான். அரசனும் தச்சனை முறைப்படியேற்று ஓரிடத்தில் இருக்கச்செய்யத் தச்சனுந் தான் கொண்டுவந்த கடிதத்தைக் கொடுத்தான்:

அதுவருமாறு:—

எனது அருமைமைந்தனுக்குச் சகல நன்மைகளும் உண்டாவதாக. நான் உனது தர்மபரிபாலனத்திற்கும், பிதிர்வாக்கியத்தை மிக்கபிரீதியுடன் நிறைவேற்றியதற்கும் மிக மகிழ்ந்தேன். உன் நாட்டிலிருந்துவந்த தச்சன் நிருமித்தகோயில்வெகு நேர்த்தியா யமைந்திருக்கின்றது. அதற் கொப்பானகோயில் இந்தத் தேவலோகத்தில் இல்லையென்றே சொல்வது தகுதி. அவனது வேலைத்திறமையை இங்கேயுள்ள விசுவகர்மா முதலிய தெய்வத்தச்சர் அனைவரும்பார்த்து மெச்சினார்கள். அவனுக்குத் தக்கபரிசுகொடுத்து அவனைக் கனப்படுத்துவது உனது கடமையாகும். இனிக் கோயில்சுவர்களின்மேல் நுட்பமான சித்திரங்கள் எழுதவேண்டும். ஆகையால், தச்சனை அனுப்பியவாறே சித்திரவேலைக்காரனை அனுப்பிவைக்கவும். அநேக ஆசீர்வாதம்.

இங்ஙனம்:
உன் அன்புள்ளபிதா.

அரசன் கடிதத்தைப் படித்து மகிழ்ந்து தச்சனை வெகுவாய் கௌரவித்துக் கொண்டாடிப் பல பரிசுகளுடனும் அவனிருப்பிடமனுப்பிவைத்தான். பின்பு சித்திரவேலைக்காரனை அழைத்துவரும்படி கட்டளையிட அவனும் தச்சனுடைய வெண்ணிறம், ஆடையாபரணங்கள், அரசனிடம் அவன் பெற்ற வரிசைகள் முதலியவற்றைக் கண்ணுற்று மயங்கி உண்மை உணராதவனாய் வாஸ்தவத்தில் தச்சன் தேவலோகஞ் சென்று வந்தவனென்று உறுதிகொண்டு அரண்மனைக்குவர அரசனுந் தச்சனுக்கு விதிப்படி இவனுக்குந் தெய்வலோகஞ் செல்ல ஏழுநாள் தவணை விதித்தான். குறித்த தினத்தில் சித்திரவேலைக்காரனும் தன் தொழிற்கருவிகளுடன் வந்து சேர்ந்தான். முன்பு தச்சனுக்குச் செய்ததுபோலவே இவனையும் மனையில் வைத்துச் சுற்றிலும் மரக்கட்டைகளை அடுக்கி நெய்யைவார்த்துத் தீயிட்டனர். தீயுங் கொழுந்துவிட்டெரியவே, சித்திரவேலைக்காரன் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல், ஐய்யோ முறையோவென்று அலறிக்கொண்டு வெளியே ஓடிவரும்படி எத்தனித்தான். எத்தனித்துஞ் சிறிதும் பயனடையாது புகையுஞ் சுவாலையுஞ் சூழ்ந்துகொண்டமையால், அடுத்த நிமிஷமே கரிந்து மாண்டான். “முன் பகற்கண்டான் பிறன்கேடு தன்கேடு—பின்பகற் கண்டுவிடும்” ஆதலால், அன்பர்களே! ஒருவற்கு மறந்தும் கேடுசூழற்க.

இங்ஙனம்:

க. வைத்திலிங்கபிள்ளை,
ஒருதுறைக்கோவை நூலாசிரியர்,
பண்ணைநகர்.


## விளம்பரங்கள்.

# இனாம்! இனாம்!!

உங்களுக்கு நாவல்களில் பிரியமா?
இல்லையேல்.
தபால் சார்ஜுக்கு
அரையணா ஸ்டாம்புடன்
உங்கள் விலாசத்தைத் தெரிவியுங்கள்.
எங்களால்
பிரசுரித்து வெளிப்படுத்தப்பட்ட

## மிருணாளினி

எனனும்
ஓர் இனியதமிழ்நாவல்
இனாமாக அனுப்பப்படும்
தாமதிக்காமல் இவைக்கே எழுதுங்கள் சொற்ப பிரதிகளே அச்சிட்டமையால் முந்தியவர்களுக்கு மாத்திரமே கிடைக்கும்

மானேஜர்
இந்தியன் அட்வர்டைஸர்,
புதுவை;

## தமிழ்ப்பெருமாட்டி.

——(:0:)——

வேதாகம புராணேதிகாசங்களையும், சைவவைஷ்ணவ சம்பிரதாயங்களையும், சரித்திர கதா நவீன நாடகங்களையும், உலோகோபகார விவகாரங்களையும், வைத்திய விநோத விவசாய முதலியவைகளையும் புனைந்து கொண்டு யாவருக்கும் பெரிதும் பயன்றரக்கூடியதாய் செந்தமிழ் முலகில் தமிழ்மொழி பரப்பிக்கொண் டுதயமாகும் அரிய மாதாந்தப் பத்திரிகை வருஷசந்தா ரூபா-3. தனிப்பிரதி அணா-6

மானேஜர்,
தமிழ்ப் பெருமாட்டிக் கழகம்,
86 தங்கசாலை வீதி,
சென்னை.

## கற்பகவிருக்ஷம்.

இது தன்னையடைந்தோர் யார் என்னென்ன கேட்கின்றார்களோ அவற்றையெல்லாம் கொடுக்கும் தேவவிருக்ஷமாகும். முக்கியமாய் அழகை அதிகப்படுத்தக்கூடியது கூந்தலேயன்றி வேறல்ல. நீங்கள் உங்கள் தலைமயிர் உதிராமல் தடுக்கவும், கறுப்பாயும் பளபளப்பாயும், மிருதுவாயும் வளரச்செய்யவும் நல்ல கூந்தல் தைலங்களைத் தேடுகின்றீர்கள். நீங்கள் வேண்டியவற்றையும் முகத்தேஜஸையும் தேகபலம் முதலிய ஆயுளாரோக்கியத்தையும் தருவதில் கற்பக விருக்ஷத்திற்குச் சமமான

## மணித் தைலம்.

என்னும் வாசனைத் தைலத்தை வாங்கி உபயோகியுங்கள். தற்காலம் வெளிவந்துலாவும் தைலங்கள் போலன்று. சாஸ்திரோக்தமாகச் செய்யப்பட்ட தைலமிது. மூளையைக் குளிர்ந்திருக்கச் செய்யவும் ஞாபக சக்தியை விர்த்திசெய்யவும் ஏற்ற தைலம் நமது மணித்தைலம் ஒன்றுதான். இரவில் நித்திரைக்குப் போகுமுன் உள்ளங்கை உள்ளங்கால், சிரசு முதலான இடங்களில் 2 3- துளி தைலத்தைத் தேய்த்துக்கொண்டால் தேகசிரமம், ஆயாசம், அதிக உஷ்ணம் இவைகளை நீக்கி நல்ல தேகாரோக்கியத்தைக்கொடுக்கும். புட்டி 1-க்கு விலை ரூ 1-6-0.

## பொருத்தமானது.

அனேகர் பல மருந்துகளை விளம்பரஞ் செய்கிறார்கள். இக்காலத்துக்கு ஏற்றதாயிருக்கிறது. ஆனால் மெதுவாய்க் குணங்கொடுக்கும் மருந்தை உபயோகிப்பார்களா? அல்லது அதி சீக்கிரத்தில் அற்புத குணத்தைக்கொடுக்கும்

## ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

உபயோகிப்பார்களா? இச்சிறந்த ஔஷதம், தேகபலம், மனோபலம், ஊக்கம், ஞாபகசக்தி, ஜீரணசக்தி முதலியவைகளைக் கொடுக்கின்றது. இன்னும் மேகரோகம், தலைவலி, நரம்புஸ்தானங்களின் தளர்வு சுருக்கிச்சொல்லில் சரீரசத்திருக்களாகிய சகல ரோகங்களையும் நீக்குகின்றன. இம்மருந்தன்றோ ஜனசமூகத்துக்குப் பொருத்தமானது. 32-மாத்திரைக்கு விலை ரூபா 1.

வைத்தியசாஸ்திரி
மணிசங்கர்கோவிந்தஜீ
ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்
715 பிராட்வே, மதராஸ்
27 DAM STREET
C,OLOMBO.

ஸ்ரீமத். கா. கந்தையாபிள்ளை
அவர்களியற்றிய

# சங்கீதத்திரட்டு.

## இரண்டாம் பாகம்

வெளியாகிவிட்டது!

வெளியாகிவிட்டது!!

இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் பாட்டுகள் யாவும் புதிய பிளேட்டுகளிலிருந்து எடுக்கப்பட்டன. தென்பாங்கு, வேடிக்கைப் பாட்டுகள்; தேவார திருவாசகங்கள் வேண்டியன அடங்கியிருக்கின்றன

விலை பிரதி ஒன்றுக்கு றிங்கி 1—00.
தபால் கூலி 15.

# சங்கீதத்திரட்டு.

## முதற்பாகம்.

இதுவும் இரண்டாம் முறை பார்த்துத் திருத்திப் பதிப்பித்தோம்.

விலை பிரதி ஒன்றுக்கு றிங்கி 1—00.
தபால் கூலி 15.

## சித்தாந்த ரத்நாகரம்.

இவ்வரிய பெயர்புனைந்து இற்றைக்குப் 15-வருடங்கட்கு முன்னர் சென்னை-சூளைசோமசுந்தர நாயகரவர்களால் வெளியிடப் பட்ட நூல்கள் பல. இவர் வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம் என்னும் காரணப்பெயர் பெற்றோர். இந் நூல்களைப் படிப்போர் சைவசமயத்தின் உண்மைகளைத் தெளிவாயறிந்து கொள்ளும் இயல்புடையராவர். பிறமதப் பிரவேசஞ்செய்ய அஞ்சுவர்.

1—ஆசாரியப்பிரபாவம் 1-50

இது நால்வர்சமயாசாரியர்களின் அவதாரத்தைப் பற்றிச் சொல்லிவரும்போதில் அவர்கள் ஏனையோரைப்போல் கருக்குழியில் புகுந்து வந்தவர்களல்ல வென்பதை விளக்கிக்காட்டும். ஆசாரிய சுவாமிகளின் பெருமையையும் வியந்துபேசும். ஒவ்வொருவரும் வாசித்தறியவேண்டிய நூல் இதுவாகும்.

2—சிவபாரம்யப்பிரதரிசினி 75 சேன்ட்.

இந் நூலிலே சிவபெருமானுக்குப் பிறமதத்தவர்கள் கூறுங் குற்றங்களுக்குப் பிரபல நியாயங் காட்டப்பட்டு ஒவ்வொன்றும் விரிவாய் மறுத்திருப்பது தேற்றம்.

3-சுக்லாம்பிரதரசலோகவிசாரம் 50 சேன்ட்.

இதில் பஞ்சாட்சரத்தின் மகிமை விளக்கப்பட் டிருக்கின்றது.

☞ வேண்டுவோர் அடியிற் கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

இந்தியா, இலங்கைக்கு வி. பி. சட்டம் இல்லை.

முற்பணம் அனுப்பினால், தபாற்கூலி இனாம்.

C. CANDIAH PILLAI
PROPRIETOR
KLANG PRINTING WORKS
KLANG


ஆறிரு தடந்தோள்வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக், கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம் வாழ்கசெவ்வேள், ஏறியமஞ்ஞைவாழ்க யானைதன்னணங்குவாழ்க, மாறிலாவள்ளிவாழ்க வாழ்க சீரடியரெல்லாம்.

Printed and published by V. Canapatip Pilai for the Proprietor at The Vidyalaya Press Jaffna.